

கழக இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 46வது பிறந்தநாளை முன்னிட்டு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சத்தியபிரபு தலைமையில் பம்மலில் நடைபெற்ற மரக்கன்றுகள் நாடும் விழா மற்றும் இலவச மருத்துவ முகாமை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைத்தார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி, பகுதிச் செயலாளர்கள் வே.கருணாநிதி, த.ஜெயகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உள்ளனர்.

### பிறந்தநாள் விழாவை யொட்டி

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழ் பரப்பும் “மாமன்னா” பிரச்சார பாடல்!

### மாவட்டச் செயலாளர்-அமைச்சர் தா.மோ.அன்பரசன் வெளியிட்டார்.

சென்னை, நவ.28

கழக இளைஞர் அணி செயலாளரும் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 46-வது பிறந்தநாள் விழாவை யொட்டி காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழ் பரப்பும் “மாமன்னா” பிரச்சார பாடலை காஞ்சி வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வெளியிட்டார்.

தி.மு.க. இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 46-வது பிறந்த நாள் விழாவை காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் 1 மாதம் விளையாட்டு போட்டிகள் நடத்தி நலத் திட்ட உதவிகள் வழங்க ஏற்பாடு செய்து உள்ளார்.

இதையொட்டி நேற்று ஆலந்தூரில் இளைஞர் மாவட்ட அமைப்பாளர் கோல்டு பிரகாஷ் ஏற்பாட்டில் நடைபெற்ற கைப்பந்து போட்டியை தொடங்கி வைத்து வெற்றி பெற்ற அணிகளுக்கு ரொக்கப் பரிசு மற்றும் கோப்பைகளை பரிசாக வழங்கினார்.

இதன் பிறகு தி.மு.க. இளைஞர் அணி மாநாட்டுக்காக கன்னியாகுமரியில் இருந்து புறப்பட்டு வந்த மோட்டார்சைக்கிள் வாகன பேரணியை வரவேற்று வழியினுப்பி வைத்தார். தி.மு.க. இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழ்பாடும் மாமன்னா பிரசார பாடலையும் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வெளியிட்டார். பம்மல் நகர இளைஞர் அணி நிர்வாக ராஜசேகர் உருவாக்கிய இந்த பாடல் பிரபலமாகி வருகிறது.

இந்த நிகழ்ச்சியில் மண்டல குழுத்தலைவர் என்.சந்திரன், பகுதி செயலாளர் பி.குணாளன், ஒன்றியச் செயலாளர்கள் ஏ.வந்தே மாதரம், ஜி.கே.ரவி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், துணை அமைப்பாளர் வீ.விஜயகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துக் கொண்டனர்.

### எம்.விநாயகமூர்த்தி தலைமை! ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. முன்னிலை!

## சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் நவம்பர் 27-ல் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் அணிவிக்கிறார்!

சென்னை, நவ. 28 -

சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நவம்பர் 27 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் விழா இன்று (28.11.2023 செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணிக்கு, அடையார் அரசு மகப்பேறு மருத்துவமனையில் வழங்கப்படுகிறது. மருத்துவமனையில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் உடை, உபகரணங்கள் வழங்கப்படுகிறது.

சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம். விநாயகமூர்த்தி தலைமை வகிக்கிறார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு நவம்பர் 27 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்க பாண்டியன், வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜே. எம்.எச்.அசன் மௌலானா, மண்டலக்குழுத் தலைவர் இரா.துரைராஜ், பகுதிச் செயலாளர் துரைகபிலன், 174 வது வார்டு மாமன்ற உறுப்பினர் எம்.ராதிகா, பி.ஜெ.பாஸ்கர், சி.சுரேஷ், அருணா வேலாயுதம், எஸ். சந்தானம், ஆ.ச.ஸ்ரீகாந்த், அ.ரவிகிருஷ்ணன், கே.சி. வனஜா, பெ.ராஜி, மு.தனசேகர், ம.தமிழரசு, ஆ.பாண்டியன், எஸ்.ஜெயக்குமார், க.கணேஷ்குமார், வி.எம்.டி. ராஜாரமணன், விசாலாட்சி கபிலன், கயல்விழி ஜெயக்குமார், சுபாஷினி துரை, த. செல்வம், கி.ஆனந்த், ப.சின்னத்தம்பி மற்றும் மாவட்ட கழக, பகுதிக் கழக, வட்டக் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

## மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க.சார்பில் மாபெரும் இரத்த தான முகாம்!

### பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாடு!

சென்னை, நவ. 28

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் சிறப்பு செயலாக்க திட்டத்துறை அமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் மாபெரும் ரத்த தான முகாம் நடைபெற்றது.

17 வது வட்டம், கொசப்பூர் பகுதியில் அமைந்துள்ள சௌபாக்கியா நகரில் நடைபெற்ற இந்த ரத்ததான முகாமில் கலந்து கொண்டு ரத்த தானம் செய்தனர்.

17 வது வட்டச் செயலாளர் கே.கருணாகரன் தலைமையிலும், வட்ட நிர்வாகிகள் சி.மூர்த்தி, எஸ்.பாலாஜி, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே.சண்முக பிரியன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ்.சிவக்குமார், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர்கள் டி.வினோத், கே.ராஜ்குமார், மாதவரம் வடக்கு பகுதி மாணவரணி அமைப்பாளர் த.விக்னேஸ்வரன், பாக முகவர்கள் என்.நாகராஜன், டி.திவாகர், வி.சுமீர், டாக்டர் எம்.மைக்கேல், பி.செந்தில், எம்.ஜான்சன், பூபாலன், மணலி புதுநகர் டோமினிக், பிரான்சிஸ், தேவராஜ், செம்மீன் எடிசன், பர்மாநகர் தினேஷ், சங்கர், காவாங்கரை குமணன், ஜெகன், கே.ஜெகன், விஜய், ஆனந்த்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்த ரத்த தான முகாமில் கலந்து கொண்டு ரத்த தானம் செய்த இளைஞர்களுக்கு அரிமா சங்கம் மூலம் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த சான்றிதழ்களை மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் கலந்து கொண்டு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஜி.முனிவேல், ஜி.செல்வம், கமலநாதன், ரகு, கீர்த்தி, நாகலிங்கம், ஈஞ்ம்பாக்கம் சுதர்சன், வில்சன், அரியலூர் நாகராஜ், எஸ்.ஆனந்த், ரோசாப்பூர் எம்.விஜயன் உள்ளிட்ட பலர் திரளாக கலந்து கொண்டனர்.

### திருவொற்றியூர் கிழக்கு பகுதிக் கழகம் சார்பில்

## வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி!

### தி.மு.தனியரசு நேரில் ஆய்வு செய்தார்!

சென்னை, நவ.28-

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும் மாநில இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் வார்டு 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 14அ ஆகிய வட்டங்களில் நடைபெற்ற வாக்காளர் சரிபார்த்தல் சிறப்பு முகாமில் அனைத்து வாக்குச் சாவடிகளிலும் பாக முகவர்கள், பாகநிலை முகவர்கள் BLA 2 & BLC கலந்து கொண்டு புதிய வாக்காளர் சேர்த்தல், முகவரி மாற்றம், பெயர் திருத்தம் செய்தல் போன்ற பணிகளை திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு ஆய்வு மேற்கொண்டார்.

இதில் வீ.கவி கணேசன், மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் டி.ஏ.ராஜ், பி.சாந்தி, பகுதி துணை செயலாளர்கள் எம்.வி.குமார், ஆர்.எஸ். சம்பத், கே.பிரபாவதி, ஆர். குமரேசன், வட்ட செயலாளர்கள் த.கார்த்திகேயன், எம்.எல்.சரவணன், டி.சி.வி. மணிகண்டன், எஸ்.தமிழ் செல்வன், குறுத்து சி.முனுசாமி, க.வீ.சதிஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், ஏகா.கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.பாஸ்கர், ஒய்.ரஜினி நந்தி, ஆர்.ரஜினிபாபு, வி. பழனிவேல், டி.டி.எம்.பாபு, பி.எஸ்.சைலஸ், ம.ஜெயராமன், ம.எத்திராஜ், கே. கார்த்திகேயன் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் கலந்து கொண்டு வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணியில் ஈடுபட்டனர்.



அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க.சார்பில் மாபெரும் இரத்த தான முகாம் நடைபெற்றது. இதனை பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தார்.

# தமிழ்நாட்டு அரசியலின் இளம் தலைவர்!



தமிழ்நாட்டின் அன்புப்பிள்ளை !

சேப்பாக்கத்தின் செல்லப்பிள்ளை !

கலைஞரின் பேரப்பிள்ளை !

கழகத் தலைவரின் வீரப்பிள்ளை !

என்றும் நம்மவர் !!

தமிழ்நாட்டின் இளம் தலைவர்,

இந்தியாவின் வளர்ந்து வரும் அரசியல் தலைவர் !!

உதயநிதி ஸ்டாலின் இந்த பெயர்

இன்று எதிர்கட்சிகளுக்கு சிம்ம சொப்பனம்.

கழக உடன் பிறப்புகளுக்கு அன்பும்,பண்பும் கொண்ட இளம் தலைவர்,கழக மூத்தவர்களின் நம்பிக்கை நட்சத்திரம் !

அடுத்த தலைமுறையில் “ திராவிட முன்னேற்ற கழகம் “ என்னும் இந்தப் பேரியக்கம் பயணிக்க வேண்டிய பாதையை நமது கழகத்தலைவர்,மாண்புமிகு முதலமைச்சர்,திராவிட பேரரசர் ஆராய்ந்து சீரிய முறையில் தீட்டி வரும் திட்டங்களை களத்தில் செயல்படுத்தி வரும் செயல் வீரர்.

1977 நவம்பர் 27 அன்று உதித்த இந்த சுயமரியாதை சுடரொளி, இன்று கழகத்தின் எதிர்காலமாய் பட்டொளி வீசி பறக்கின்றது. முத்தமிழறிஞர் கலைஞர் சிறையில் இருந்த போது அவரை காண சிறுவனாக இருந்த நமது கழகத்தலைவர்,இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் சிறை சென்றதை போல,மிசா கைதியாக நமது தலைவர் சிறையில் இருந்த போது கருவுற்றிருந்த அண்ணியார் அவரை காண சிறை சென்றார்.அந்த வகையில் அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்கள் கூறியதை போல கருவில் இருந்தே அரசியலில் இருப்பவர் நம் இளம் தலைவர்.

சிறுவனாக,பதின்பருவ மாணவனாக தளபதியாரின் தோளில் ஏறி கறுப்பு கொடி ஏந்திய நம்மவர் இன்று ஒன்றியத்தில் ஒய்யாரமாய் வீற்றிருக்கும் பாசிச சக்திகளுக்கு எதிராக தனது போர்வாளினை சுழற்றி வருகிறார்.காவிக்கும்பலிடம் இருந்து தமிழ்நாட்டை காத்து நிற்கும் கேடயமாக நமது கழகத்தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி நடைபெற்றுவரும் இந்த சூழலில் நமது இளம்தலைவரின் துடிப்பு மிக்க செயல்பாடுகள் கழகத்திற்கு புது ரத்தம் பாய்ச்சி உள்ளது என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை.

2019 நாடாளுமன்ற தேர்தலில் தமிழகம் முழுக்க கழகம் மற்றும் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பரப்புரை செய்த நமது இளம் தலைவர் ஒற்றை செங்கல்லை வைத்து எதிர்கட்சிகளுக்கு முடிவுரை எழுதினார்.ஒரே இரவில் செல்லாக்காசாகிப்போன 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுகளை மக்களிடம் காட்டி நிர்வாகத்திறனற்ற மதவாத அரசின் முகத்திரையை கிழித்தெறிந்தார்.

தெளிவு பெற்ற மக்கள் அந்த தேர்தலில் 38 நாடாளுமன்ற தொகுதிகளை நமது தளபதியார் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழக அரசிற்கு பரிசளித்தனர். அத்தோடு முத்தமிழறிஞர் கலைஞர் மறைவுக்கு பின் தமிழகத்தில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது என்ற பேச்சுக்கள் எல்லாம் தவிடு பொடி ஆகின. அதே சூட்டோடு 2021 சட்டமன்ற தேர்தலை எதிர்கொண்டது நமது கழகத்தலைவர்,தலைமையிலான திராவிட முன்னேற்ற கழகம்.

இத்தேர்தலில் சென்னை சேப்பாக்கம் தொகுதியில் முதன்முறையாக இளம் தலைவர் களம் கண்ட போது எழுந்த வாரிசு அரசியல் என்ற விமர்சனத்திற்கு அதை மக்கள் முடிவு செய்வார்கள் என வெளிப்படையாக பதில் அளித்தார்.இளம் தலைவர் சூளுரைத்தபடியே 68% மேலான வாக்குகளை அளித்து இளம் தலைவரை எதிர்த்து போட்டியிட்ட அத்தனை பேரையும் டெபாசிட் இழக்க வைத்து மாபெரும் வெற்றியினை பரிசளித்தனர் சேப்பாக்கம் தொகுதி மக்கள்.தான் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட நிமிடமே தொகுதிக்குள் களம் புகுந்த நமது இளம் தலைவர் மக்கள் குறைகளை கேட்டறிந்து சீர் செய்தார்.மிக விரைவாக சேப்பாக்கத்தின் செல்லப்பிள்ளையாக தொகுதி மக்கள் அவரை உச்சி முகர்ந்தனர்.

தொடர்ந்து ஓய்வின்றி உழைத்ததின் பலனாக கழகத்தின் இளைஞரணி செயலாளர் என்ற பெரும் பொறுப்பு அளிக்கப்பட அதை மிக கவனத்துடன் ஏற்று சிறப்பாக செயலாற்றி வருகிறார்.கழகத்தில் இளைஞர்களின் பங்களிப்பை பெருக்கிட வேண்டும் என்ற நமது கழகத்தலைவர் அவர்களின் ஆணையை ஏற்று கழகத்தில் புதிதாக ஒரு கோடி இளைஞர்களை சேர்ப்பது என்ற இலக்குடன் 234 தொகுதிகளிலும் சூறாவளி பயணம் மேற்கொண்டார்.ஒன்றிய அரசின் அவலங்களையும், பழனிசாமி தலைமையிலான கடந்த அரசு தமிழக மக்களுக்கு செய்த துரோகங்களையும்,மக்கள் மொழியில் அவர் பேசும் பாணி மக்களிடையே பெரும் வரவேற்பு பெற்றுள்ளது.

அவரது செயல்திறன் ஒரு தொகுதிக்குள் அடங்கி விடலாகாது,அவரது ஆற்றல் தமிழ்நாட்டின் அனைத்து தொகுதிகளுக்கும் தேவை என்று மக்களும்,கழகத்தினரும் ஒரு சேர விரும்பியதால் ஒரு மகுடம் சூட்டியதை போல இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறைக்கு அமைச்சராக்கியது கழக தலைமை.

தன்னை நம்பி எத்தனை பொறுப்புகள் வழங்கப் பட்டாலும் அத்தனையிலும் சொல்லி வைத்து சிக்ஸர் அடிப்பதையே வழக்கமாக கொண்டுள்ள நமது இளம்தலைவர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராக பதவியேற்றதும், இந்தியாவிலேயே முதன்முறையாக 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை சென்னை மாமல்லபுரத்தில் நடத்தி சென்னையை இந்தியாவின் செஸ் தலைநகரமாக மாற்றி காட்டினார்.தமிழக இளைஞர்கள் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்ல அவர்களை தயார்படுத்துவது அவசியம் என்ற இளம்தலைவரின் கோரிக்கையை ஏற்று சென்னை அருகே பிரம்மாண்ட விளையாட்டு நகரம் உருவாக்கப்படும் என்று அறிவித்துள்ளது தமிழக அரசு.இப்படி தன் துறை சார்ந்த பணிகள்,தன் தொகுதிக்கான வளர்ச்சிப்பணிகள் என அனைத்தையும் திறம் பட செய்து வரும் இளம் தலைவர் தலைமையில் ‘மாநில உரிமை மீட்போம் ‘ என்ற முழக்கத்துடன் குமரி முனையில் இருந்து இளம் தலைவர் தலைமையிலான இளைஞர் படை இருசக்கர வாகனப்பேரணியை தொடங்கியுள்ளது.



முனைவர். **பி.பழனியப்பன்**

தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர்

188 இருசக்கர வாகனங்களில் 38 மாவட்டங்கள் வழியாக 13 நாட்களில் 8647 கிலோ மீட்டருக்கும் மேலாக பயணிக்க உள்ள இந்த பிரம்மாண்ட இருசக்கர வாகன பேரணிக்காக சிறப்பு சீருடை வழங்கப்பட்டுள்ளது. இப்பேரணிக்காக தமிழ்நாட்டை வள்ளுவர்,பெரியார்,அண்ணா,கலைஞர் என நான்கு மண்டலங்களாக பிரித்து நாள்தோறும் கிட்டத்தட்ட 80,000 மக்களை வீதி வீதியாக சென்று சந்திக்கும் வகையில் நிகழ்ச்சி நிரல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

234 தொகுதிகளும் சுற்றிச்சுழலும் தமிழ் நாட்டின் இளம் தலைவர் தலைமையிலான இந்த இளைஞர் படை நம் இளம் தலைவரின் பிறந்த நாளும், இளைஞர் எழுச்சி நாளுமான நவம்பர்27 அன்று தாய்க்கழகம் உருவான சேலத்தில் நிறைவடைகிறது.இப்பேரணியில் நீட் விலக்கு கையெழுத்து இயக்கத்தை மக்களிடம் நேரடியாக கொண்டு சேர்க்க உள்ளோர்.நம் இளம்தலைவர் அறிவித்துள்ள இந்த ‘மாநில உரிமை மீட்போம்’ என்ற இந்த பேரணியானது ஒன்றியத்தின் செவிகளில் இடிமுழக்கமாக இறங்கியுள்ளது.டிசம்பர் 17 ம் தேதி நடைபெற உள்ள இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாட்டிற்கு முன்னோட்டமாய் அமைந்துள்ள இரு சக்கர வாகன பேரணி எனப்படும் இந்த இரு சக்கர வாகன வெள்ளோட்டம் வெல்லட்டும். இளையோர் படை நிலம் அதிர புறப்பட வேண்டும்.பாசிச மதவாத கும்பலை மக்களிடம் அம்பலப்படுத்தும் நம் எதிர் கால போராட்டத்திற்கு வலு சேர்க்க வேண்டும். சாதிய ஏற்றத் தாழ்வுகளின் கூடாரமாக விளங்கும் சனாதனத்தை சல்லிசல்லியாக நொறுக்கியத்துடன் மட்டுமின்றி எக்காரணத்திற்காகவும் கொண்ட கொள்கையில் இருந்து பின் வாங்க மாட்டேன் என்ற நமது இளம்தலைவரின் கொள்கை உறுதியில் தெரிவது

கலைஞரின் வார்ப்பு !

தலைவரின் வளர்ப்பு !

திராவிட இனம் உயர,

தமிழ்நாடு வளம் பெற,

வாழ்க பல்லாண்டு! வாழ்க பல்லாண்டு !! என வணங்கி வாழ்த்தி உளமகிழ்கிறேன் !!

என்றும் கழகத்தலைவர் வழியில்